DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Proceedure)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 94/2021

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | அருணாசலம் |
| Father / Husband Name | குப்புசாமி @ மூங்கிலன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**06.04.2024**

**குறுக்கு விசாரணை**

1. எதிரியை எனக்கு தெரியும். அசா.1 சஞ்சீவி என்பவரை தெரியும். தேதி ஞாபகம் இல்லை. சஞ்சீவி என்பவர் எதிடரிக்கு ரூயாய் 5 லட்சம் பணம் கொடுத்தார். தாம்பரம் ஓட்டலில் வைத்து மதிய வேலையில் மேற்படி பணத்தை கொடுத்தார். பணத்தை கொடுத்து பெற்றதற்கு அக்ரிமெண்ட் எதுவும் போடப்பட்டதா என்றால் போடப்பட்டது. மேற்படி அக்ரிமெண்டை எங்கு தட்டச்சு செய்து தயார் செய்யப்பட்டது என்றால் அசா1 தயார் செய்து கொண்டு வந்தார் நான் கையொப்பம் மட்டும் செய்தேன். எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி அட்வாண்ஸ் தொகையை கொடுக்கும் போது அசா1, அசா1 ன் மனைவி, அசா6 தங்கராஜ் மற்றும் நான் உடன் இருந்தேன். மேற்படி நபர்கள் இருந்தார்கள் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான்.

2. சொத்து சம்மந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அசா1 சொல்லியுள்ளார் வேறு எதுவும் தெரியாது. அசா1 திருகழுகுன்றம் நீதிமன்றத்தில் இருந்து பணத்தை பெற்றுக்கொண்ட விவரம் எனக்கு தெரியும். எதிரியும் அசா1 ம் அக்ரிமெண்ட் எதுவும் போட்டுக்கொள்ளவில்லை என்றாலும் எதிரி அசா1 யிடம் வாங்கிய கடனை திரும்பி செலுத்திவிட்டார் என்றாலும் சரியல்ல. அசா1 கேட்டுக்கொண்டதன் பேரில் நான் அக்ரிமெண்டில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. அக்ரிமெண்ட் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றாலும் அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்க வில்லை என்றாலும் நான் அசா1க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Proceedure)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 94/2021

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ராஜா |
| Father / Husband Name | சஞ்சீவி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**06.04.2024**

**குறுக்கு விசாரணை**

1. அசா1 சஞ்சீவி எனது தந்தையா என்றால் இல்லை எனது அப்பா பெயரும் சஞ்சீவ தான். பணம் கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் அசா1 சொல்லிதான் தெரியும் என்றாலும் சரிதான். அசா1 2016 ம் வருடம் 9 வது மாதத்தில் மேற்படி பணத்தை பற்றி அசா1 என்னிடம் சொன்னார். எதிரி அசா1 யிடம் ரூபாய் 10 லட்சம் கொடுத்து அக்ரிமெண்ட் போட்டதாக சொன்னார். எங்கு வைத்து யார் முன்னிலையில் கொடுத்தார் என்றால் எங்கு வைத்து கொடுத்தார் என்று தெரியாது. அருணாசலம் மற்றும் தங்கராஜ் முன்னிலையல் கொடுத்தார்.

2. நான் ஆணைக்குன்றம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அசா1 வேலச்சேரியில் வசிக்கிறார். அசா1 எங்கள் ஊரை சேர்ந்தவர் தான். பிழைப்பு தேடி சென்னைக்கு சென்று சுமார் 35 வருடங்களாக சென்னையில் வசித்து வருகிறார். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. விவசாய கூலி வேலை செய்கிறேன். அசா2 அருணாசலம், அசா6 தங்கராஜ் ஆகியோரும் ரியல் எஸ்டேட் புரோக்கர் தொழில் செய்து வருகிறார்கள். அசா1 எனக்கு மாமா உறவு முறை ஆவார். அசா1 சொல்லிதான் எதிரிக்கு பணம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அசா1 எதிரியிடம் கொடுத்த பணத்தை திருக்கழுகுன்றம் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுகொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. போலிசார் என்னை விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னை காவல் நிலையத்திற்கு யார் அழைத்து சென்றார்கள் என்றால் போலிசார் போன் செய்ததன் பேரில் சென்றேன். போலிசாருக்கு எனது தொலைபேசி என்னை யார் கொடுத்தது என்றால் அசாஆ1 புகாரை கொடுக்கும் போது நான் உடன் சென்றிருந்தேன் அப்போது போலிசார் என் தொலைபேசி என்னை பெற்றுக்கொண்டார்கள். ஏதாவது பிரச்சனை நடந்தால் பார்ட்டிகளை காவல் நிலையம் அழைத்து சென்று புகார் கொடுக்கவைத்து சமரசம் பேசுவது உண்டா என்றால் அவ்வாறு செய்யவில்லை.

4. புகாரை யார் கொடுக்க சொன்னது என்றால் நான்தான் கொடுக்க சொன்னேன். புகாரை அசா1 ஐ தான் எழுத சொன்னேன். புகாரை அச்சிறுபாக்கம் கார்பரேஷன் காம்லெக்ஸ் அருகே வைத்து புகார் எழுதப்பட்டது. புகார் எழுதும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் அசா1, அசா2 மற்றும் நான் மற்றும் ஊர்காரர்கள் சிலர் இருந்தார்கள். புகாரில் உள்ள வாசகத்தை யார் சொல்லி எழுதினார் என்றால் நான் சொல்லி எழுதவில்லை. வழக்கறிஞர் வைத்து எழுதினார் புகாரை மிகைப்படுத்தி எழுதினால் தான் புகார் எடுத்துக் கொள்ளப்படும் என்றால் சரிதான்.

5. எனக்கு இந்த வழக்கை பற்றி தெரியாது என்றாலும் புகாரை கொடுத்து எதிரியிடமிருந்து பணம் பறிப்பதற்காக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி ஒரு வழக்கறிஞர் என்றால் சரிதான். ஆணைக்குன்றத்தில் எதிரிக்கும் 12 ஏக்கர் மாமரம் உள்ளது என்றால் 9 1/2 ஏக்கர் உள்ளது. மேற்படி நிலத்தில் விளையும் மாம்பழங்களை அந்த ஊரில் இருக்கும் நபர்கள் பறித்துக்கொள்வார்கள் என்றால் சரிதான். ஊர் மக்களை பறிக்க விடாமல் நான் மட்டும் பறித்து பணம் ஆக்கினேன் என்றால் சரியல்ல இது சம்மந்தமாக என் மீது புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

6. எதிரி என்னிடம் அவ்வாறு நான் தனிப்பட்ட பறிக்க கூடாது என்று சொல்லி பேசினாரா என்றால் எதிரி மற்றும் அவருக்கு தெரிந்த நபரான சுரேஷ் என்பவர் இருவரும் சேர்ந்து சொன்னார்கள். இந்த காழ்புணர்ச்சியில் நான் அசா1 வுடன் சேர்ந்து எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் அசா1 சொன்னதன் பேரில் நான் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல